# பட்டுக்கோட்டை நகராட்சி

**ஸ்ரீ சார்வரி வருடம் கார்த்திகை மாதம் 15–ம் தேதி திருவள்ளுவராண்டு 2051 (2020–ம் ஆண்டு நவம்பர் 30–ம் தேதி) திங்கள் கிழமை மதியம் 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. கா.சென்னுகிருஷ்ணன்,எம்.ஏ.,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**பொருள் எண்..1**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (MA-2) அரசாணை எண்..303, நாள்..09.09.2020–ன்படி ஒருங்கிணைந்த நகர்புற மேம்பாட்டு திட்டம் (IUDM 2020-2021)–ன் கீழ் பட்டுக்கோட்டை நகராட்சி பகுதியில் சாலைப்பணிகள் மேற்கொள்ள மதிப்பீட்டு தொகை ரூ.276.30லட்சத்திற்கு IUDM GRANT ரூ.221.04 லட்சம் மற்றும் நகராட்சி பங்குத் தொகை ரூ.55.26 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஆதாரத்தைக் கொண்டு இப்பணிகள் மேற்கொள்ள 27.10.2020 அன்று கீழ்கண்ட பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

பட்டுக்கோட்டை நகரில் வார்டு எண்..2,7,10,12,24,25,27,30,31 மற்றும் 33 ஆகிய வார்டுகளில் சாலைகள் மேம்பாடு செய்யும் பணிக்கு 27.10.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. சாலைகளில் பேவர் இயந்திரம் பயன்படுத்தி தார்தளம் அமைத்தல் பணிக்கு கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | P.Karuppaiah, Pudukkottai | மதிப்பீட்டை விட 5.46 % அதிகம் |
| 2) | C. Senthilkumar, Pudukkottai | மதிப்பீட்டை விட 17.07 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளியில் மதிப்பீட்டை விட கூடுதலாக விலை விகிதம் கொடுத்துள்ள P.Karuppaiah, ஒப்பந்ததாரர் அவர்களிடம் தங்களால் கொடுக்கப்பட்டுள்ள விலை விகிதத்தை குறைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதன்பேரில், P.Karuppaiah, ஒப்பந்ததாரர் நகராட்சி அலுவலகத்திற்கு நேரில் வருகை தந்து தற்போதுள்ள மார்க்கெட் விலை விபரம் மற்றும் பணியாட்களின் கூலி ஆகியவற்றை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு தன்னுடைய ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை குறைத்து கொடுப்பதாக சம்மத கடிதம் கொடுத்துள்ளார். அதன்அடிப்படையில் தயார் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு:

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த சதவீதம் |
|---|---|---|
| 1) | P.Karuppaiah, Pudukkottai | மதிப்பீட்டை விட 4.96 % அதிகம் |
| 2) | P.Chinnappan, Pudukkottai | மதிப்பீட்டை விட 17.07 % அதிகம் |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள P.Karuppaiah, ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 4.96 % அதிகம் உள்ளது. மேற்கண்ட பணியின் முக்கியத்துவம் கருதி தனி அலுவலரின் அதிகாரத்தை பயன்படுத்தி மதிப்பீட்டைவிட 5 சதவிகிதம் கூடுதல் வரை உள்ள ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் ஏற்கலாம் என நகராட்சி பொறியியல் கையேட்டில் விதி எண்.2.7.2–ல் தெரிவிக்கப்பட்டுள்ளதின் பேரில் மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு | மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.கஎண். 138/2020/இ1) |

**தீர்மானம் எண்..564 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

**பொருள் எண்..2**

பட்டுக்கோட்டை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு நடவடிக்கையாக பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு–15ன் கீழ் விலைப்புள்ளி பெற்று மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த விபரம் கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. | நிறுவனத்தின் பெயர் | பட்டியல் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்கு ஒலிபெருக்கி அமைத்து மைக்செட் மூலம் விளம்பரம் செய்தல் | 30,000– | சாமியப்பா சவுண்ட் சர்வீஸ், பட்டுக்கோட்டை. | 14,000– |
| 2. | கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கை பணிக்கு கிருமிநாசினிகள் பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு, பினாயில் சப்ளை செய்தல் | 3,28,000– | யசோதா ஏஜென்சீஸ், 87/ஏ, தஞ்சாவூர் ரோடு, பட்டுக்கோட்டை. | 3,28,000– |

அலுவலக குறிப்பு.. மன்றம் பதிவு செய்யலாம்.
(ந.க.எண்..1144/2020/எச்1)

**தீர்மானம் எண்..565**

ஒம்/கா.சென்னுகிருஷ்ணன்
ஆணையாளர்/தனி அலுவலர்
பட்டுக்கோட்டை நகராட்சி

# பட்டுக்கோட்டை நகராட்சி

**ஸ்ரீ சார்வரி வருடம் கார்த்திகை மாதம் 1–ம் தேதி திருவள்ளுவராண்டு 2051 (2020–ம் ஆண்டு நவம்பர் 16–ம் தேதி) திங்கள் கிழமை மதியம் 12.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை.. திரு. கா.சென்னுகிருஷ்ணன்,எம்.ஏ.,**
**தனி அலுவலர்/ ஆணையர்.**

**பொருள் எண்..1**

பட்டுக்கோட்டை நகராட்சியில் 30 KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) அமைத்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களது செயல்முறை ந.க.எண்..26888/ UGSS-2/2018-10, நாள்..15.11.2018ன்படி IUDM 2018-19 திட்டத்தின் கீழ் ரூ.360லட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதற்கான தொழில்நுட்ப அனுமதியும் பெறப்பட்டு பட்டுக்கோட்டை நகராட்சி உரக்கிடங்கில் உள்ள புல எண்கள்.. 84/1சி, 85/1ஏ, 1பி, 86/1ஏ–ல் அமைந்த இடம் தேர்வு செய்யப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. தற்போது 75 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டுள்ளதாலும், மீதமுள்ள பணிகள் ஒரு மாத காலத்திற்குள் முழுமையாக முடிவடைய உள்ளதாலும், விரைவில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) இயக்கப்பட உள்ளது. எனவே கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (Fecal Sludge Treatment Plant) -ஐ இயக்குவதற்காக கசடு கழிவு நீர் மேலாண்மை துணை விதிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், அனுமதி பெற்றவுடன், நாளிதழில் விளம்பரம் செய்யவும், பின்பு அரசிதழில் வெளியிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலக குறிப்பு.. | மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.. 2381/2019/இ1) |

**தீர்மானம் எண்..563 .. அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது ..**

ஒம்/கா.சென்னுகிருஷ்ணன்
ஆணையாளர்/தனி அலுவலர்
பட்டுக்கோட்டை நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையாளர்
பட்டுக்கோட்டை நகராட்சி